களாகயிருந்தாலும் விலை உயர்த்தப்பட்டிருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் சிரமப்படுகிருர்கள் என்பதைப் பரிசிலித்த பிறகு கடந்த ஐந்து மாத காலத்திற்கு முன் பால் விலையை உயர்த்தியிருக்கிருேம்.

DR. H. V. HANDE : Will the Government give plastic bottles. . . .

MR. DEPUTY SPEAKER : That is the next question.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று அரசு அக்கறை கொண்டிருந்தாலும் மாட்டுத் தீவனம் என்று சொல்லப்படும் பருத்திக் கொட்டையை அதிக விலை கொடுத்து சோப்பு செய்யும் பேக்டரிகள் முழுவதுமாக வாங்கி விடுகிருர்கள். பருத்திக்கொட்டை மாடுகளுக்கு அத்தியாவசியமான தேவை. அதை வாங்க முடியாமல் இருப்பதைத் தடுக்க அரசாங்கம் பருத்திக் கொட்டை விலையைக் குறைப்பதற்கோ அல்லது இம்மாதிரி பேக்டரிகள் வாங்குவதைத் தடுப்பதற்கோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாயூரம் நகரில் தனியார் நடத்தும் பால்பண்ணைகளில் லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாயும், அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் நடத்தும் பால் பண்ணைகளில் லிட்டர் ஒன்றுக்கு 85 காசுக்கும் வழங்கப்படுகிறது. இதைச் சரிசெய்து கூட்டுறவுத் துறைக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் இதை மாற்றியமைத்திட, சரி செய்திட அரசு ஆலோசனை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பின் சார்பில் உற்பத்தியான பாலை நாம் வாங்குகிருேம். தனியார் வெளியில் விற்கும் நிலைமைகளை வைத்து கூட்டமைப்பின்மூலம் விலை நிர்ணயம் செய்ய முடியாது.

Supply of milk in plastic containers

* 220 Q.—TIRU S SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(a) whether there are proposals under the consideration of the Government to replace the bottles with plastic bags for milk distribution by the Tamil Nadu Dairy Development Corporation; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ் நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் புட்டிகளில் பால் வழங்கு முறையை முழுவதுமாக மாற்றி விட்டு அதற்குப் பதிலாக பிளாஸ்டிக் சிப்பங்களில் பால் வழங்கத் திட்டமிட வில்லை. சோதனை அடிப்படையில் மட்டுமே இந்த முறையை மேற்கொள்ளக் கழகம் கருதியுள்ளது. இச்சோதனையில் வெற்றி கிட்டினால், அதிக அளவில் பாலை இத்தகைய கொள்கலன்களில் வழங்கக் கழகம் முயற்சி செய்யும்.

(இ) இந்த யந்திரங்கள் முழுவதும் தானே இயங்குபவையாகும். இவை இரு மடிப்புகளையுடைய பாலிதின் தாள்களைக் கொண்டு பைகளைத் தயாரித்து அவற்றினுள் பாலை நிரப்பி பையினுள் காற்றுப் புகா வண்ணம் அடைத்து அப்பைகளின் வாய்கள் பற்ற வைப்பு முறை மூலம் இறுக மூடப்படுகின்றன. இந்த யந்திரங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக் கின்றன. இதற்கு ரூ. 3 லட்சம் வரை அந்நியச் செலாவணி தேவைப்படும்.

DR. H. V. HANDE : The Hon. Minister was saying that he would not be able to give plastic bottles for all. Will it be possible for this Government to see to it that fresh milk is supplied at distribution points in time. Now there is a lot of time-lag between production and distribution time. Will the Hon. Minister streamline the thing and see that within three to four hours from milching the cow, it is bottled and reaches distribution points?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இப்பொழுது சேகரிக்கப்படும் பால், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கொண்டு வருகிறோம். ஆனால் கொஞ்சம் தாமதப்பட்டு விநியோ கிக்கப்பட்டாலும் அது கெடாத வகையிலே எந்தெந்த வகைகளிலே பாது காக்கப்பட வேண்டுமோ அப்படிப் பாதுகாத்து தூய்மையாக வழங்க நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். பிளாஸ்டிக் பைகளில் வழங்குவதைப் பொறுத்த வரையில் மேலும் தூய்மையாக செய்யத்தான் இந்த ஏற்பாடுகளை நாம் சோதனை முறையிலே மேற்கொள்ள இருக்கிறோம். அது வெற்றியைக் கொடுத்தால் தொடர்ந்து செய்யலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த பிளாஸ்டிக் பை களிலே பால் கொடுப்பதால் பொதுச் சுகாதாரத்திற்குக் கெடுதல் இருக்கிறது என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அதைத் திரும்ப 'ஃப்யூமிகேட்' செய்ய வேண்டுமென்ற கருத்து கூறப்படுகிறது. எனவே அது சம்பந்தமாக ஆய்வு நடத்தப்படுமா? அதன் முடிவு என்ன என்று அறிவிப்பார்களா?

1973 மார்ச் 2]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அத்தகைய புகார்கள் எதுவும் இதுவரையில் வரவில்லை. உத்தரப் பிரதேசத்தில் இருக்கும் பந்த் நகரில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும், இமாலயப் பிரதேசத்தில் மாண்டி பால் பண்ணையிலும் பிளாஸ்டிக் பை முறை வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறது. பல வெளிநாடுகளிலும் இம்மாதிரி பின்பற்றப்பட்டு வெற்றிகரமாக இருப்பதால் நம்முடைய நகரத்திலும் செய்ய வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

DR. H. V. HANDE : Will it be possible for the Hon. Minister to take steps to see that milk brought in the vans are kept in cold-storage, because the milk gets spoiled when it is kept for more than 6 or 8 hours and it takes such a long time before it reaches the last distribution point?

மு.ப. 10–00

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பால் பக்குவம் செய்யப்பட்டவுடன் இரவு நேரத்தில் பால் அந்தந்த விற்பனை நிலையங்களுக்குக் கொண்டு போய் விநியோகிக்கப்படுகிறது. எல்லா வகையிலும் கெடாத அளவுக்கு பால் பக்குவப் படுத்தி அனுப்பப்படுகின்ற காரணத்தால் அவை கெட்டுப் போக வழி இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது புட்டியில் வருகின்ற பாலுக்கே கார்க் போட்டு மூடுவது கிடையாது. மூடி போட்டு அனுப்பும் போதே பல ஜந்துக்கள் அதிலே இருக்கிறபோது மூடி இல்லாமல் இருந்தால் நிலைமை என்னவாகும். இதனால் கலப்படம் செய்வதற்கு அதிக வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பால் பண்ணைக்கு மின்சாரம் வெட்டியதன் காரணமாகத்தான் அந்த மூடிகள் போடப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். இதைத் தவிர்க்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பால் பண்ணைகளுக்கு மின் வெட்டு கிடையாது. கவர் போடாமல் அனுப்புவதில்லை. அலுமினிய கவர் போட்டுத்தான் எல்லா விற்பனை நிலையங்களுக்கும் அனுப்புகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது கவர் போடாமல் பாட்டில் சப்ளை செய்யப்படுகிறது. கேட்டால் மின்சார வெட்டு என்று சொல்லுகிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் இது பற்றிக் கவனித்து ஆவன செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட குறை இருக்குமானால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Are these plastic bags or bottles capable of being used for a second time? Can they be re-used?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்த பிளாஸ்டிக் பைகளை ஒருமுறை உபயோகித்த பிறகு இரண்டாவது முறையாக உபயோகப்படுத்த முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் (Senate) இப்பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் ஈ. எம். நடராசன், எம். ஆர். கண்ணன், துரைமுருகன், ந. கணபதி, முனு ஆதி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோரின் பதவிக் காலம் 22—3—1973-ம் நாளுடன் முடிவடைய இருப்பதால், மேற்குறிப்பிட்ட ஆறு வெற்றிடங்களுக்கு, தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 6—3—1973 செவ்வாய்க் கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 7—3—1973 புதன்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 8—3—1973 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறு இடங்களுக்கு மேற்படின், 12—3—1973 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டப் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் பழைய ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.